## SPEECH DELIVERED BY PROF. M.S. SWAMINATHAN AT THE CENTENARY CELEBRATIONS HELD AT CHENNAI



Dr. Rangarajan, Mrs. Rangarajan, Dr. Raja Chellaiah, the dynamic Chairman of the City Union Bank Shri Narayanan, the Executive Director Shri Balasubramanian, other Directors of the bank and many others, those who are working in the Bank, staff and employees, distinguished guests, ladies and gentlemen,

When Mr Narayanan invited me to come here I accepted with great pleasure because I asked myself, "when did I know this bank. It was, I think, in the age of 7 or 8, Shri R.V.Ramani is also here, we were all in Kumbakonam. At that time, my father was the Chairman of Kumbakonam Municipality. Mainly he became the Chairman to eradicate filariasis, elephentasis from Kumbakonam, which was succeeded by only two tools he used i.e., education and social mobilisation. The mosquitoes have gone in one year; only to show that we can do it also in Chennai. If you want, it can be done; but it requires lot of cooperation, lot of understanding and education. But I recall, I think, it was the Kumbakonam Bank at that time, our account was there. My father died when I was young, so my mother and my uncle used to send me sometimes to get some money and I think, if we withdrew 10 rupees it was a large amount at that time; in 1930s withdrawing more than 10 or 20 rupees from banks was large. Once I asked my mother there was also a very fine looking Imperial Bank of India, why don't we have an account there and she said Kumbakonam Bank is our bank, Imperial Bank belongs to imperial power and therefore we should stick to Kumbakonam Bank not to go elsewhere; I think it always remained in my mind and the sole concept of us, you know the pride in our own institution that we can build them up and should not be taken away by some big names because these days multi national companies, institutions coming to India not that they are not unwelcome, but I think we can nurture our own institutions and build them up as Dr Raja Chellaiah said, today is a day of celebration, it is the day of thanks-giving, thanks giving to all those who built up this great institution after all, finally, it is not the bricks and mortar, which makes an institution, it is the people who are working in it, Mr. Mahalingam (in the beautiful video show, showed the progress made by the bank) Mr. Srinivasan and now last 24 years under the leadership of Mr Narayanan and his colleagues, the bank has grown from strength to strength. I think the health of a bank is the clear index of the efficiency of recycling of money by nations I think almost all the countries have progressed in the management of their money. Unless money is recycled in an efficient and purposeful way nations do not grow and therefore I think, the health of the bank is exceedingly important and whether you call it conservative management or prudent management or effective management. I think management of the banks by people who are in charge of them, finally determines the fate of the bank and I want, on behalf of every one, people like depositors like me and also shareholders to express my sincere gratitude to Mr Narayanan and through him each and every one of the staff members of the bank, they are after all pillars that they have built up, we are

exceedingly grateful to them. Because, many times, the Banks' management, I am sorry to say, do not realise that they are handling depositors' money, it is not their own money and it is very important. I like the word conservative or prudent management of the money, because, it is somebody's money those who put it in the bank in trust. The last 100 years in the history of this bank 1904-2004, as Dr Raja Chellaiah said, has been a tremendous progress in the country, particularly, from 1947 independence onwards. Every parameter, you take lifespan, I recall from our great mathematician Mr. Ramanujam, almost every body 28 to 30, people used to die very young. In fact, when we became independent in 1947, I think our average lifespan was 30 to 32. It is, in Kerala, over 70 and I am sure in the next 5 to 10 years it will be improve by 20 or 30. The country, as a whole, excepting some pockets, lifespan is over 70 years. Remarkable progress in every field, if you recall what our Former President Mr. K.R.Narayanan said, on the midnight of 14th and 15th of August 1997, which represented the 50th independence day, he picked two achievements of independent India, particularly for mentioning.

One was sticking to democratic systems of governance, soon elections are going to come, our news papers and the President also urged everybody to vote, vote fearlessly and vote only to those who are not corrupt. But I think, if we look at our regional surroundings, all our neighbours we have, have been almost in a foaming flame in the cause of democracy and this is a great thing, he underlined this and we must again nurture and cultivate it The other one, he mentioned was agricultural progress. Almost from begging bowl to a fairly reasonable and comfortable position. The transformation of India, in the because in pre-independence India from 1904 to 1947 bank's first 50 years, the bank's growth rate in agricultural credit is hardly ranging from 0.01 % to 0.1 % . Therefore, it was practically stagnant and agricultural stagnation means rural stagnation. As Mahatma Gandhi always used to say you must have progress in agriculture, because that is the major profession of rural areas and even according to 2001 census, 70 % of our population are still in rural areas, it is only about 29 - 30% in urban. Therefore, more we devote our attention, particularly to the assetless people those who have no money at all or land or livestock, what we call landless labourer, who all survive under the World Bank's ultra poor category i.e, one dollar per day i.e 45 rupees per day, the bank has classified World Bank's ultra poor and poor under two dollars and one dollar a day. These people have no assets at all and they are the people, today, who have to be helped by the banks in a constructive way not by giving away the money in loan melas or so, but in a more responsible way. And therefore, my last point to Mr. Narayanan and this bank, wherever they are operating particularly in Thanjavur delta since your origin is in Kumbakonam; I think “charity begins at home”, we must extend the “feel good factor” to all. You know “feel good factor for all”, these are days when we say “health for all”, the “feel good factor” should also be for all. So long as the social exclusion is prevalent there would not be peace and progress. I think, today is modern information age, thanks to enormous expansion in our media. All media, viz., electronic media or news paper or internet or press or vernacular press or radio enormous progress is taking place in every one of these fields. It has also brought people to realise why should we be so poor or why should we be so deprived while others are living in great luxury.

Therefore, in the interest of all of us who are somewhat well to do, what you call middle class, it is our responsibility and privilege to ensure that this "feel good factor" is spread to every one. Social inclusion and not social exclusion is the methodology we are operating. This is why I applaud this bank the few examples they gave of enterpreuners, the hand holding, not to discourage them even when something wrong happens but to encourage them; that we can succeed is important principle and I hope that the bank will set again an example in supporting all Self Help Groups in your area. Because the Self Help Groups must be sustainable Self Help Groups, not Self Help Groups in my view alone. They become sustainable only if the bank, technology and market meet in a triangle. Sustainability of the Self Help Groups will depend upon the technological foundation support from resources particularly from banks and finally the linkage to the market, market of entrepreneurs . This is the only way that we can create jobs. Self employment has to be only the path way for survival of a very large number of people. While we are talking about feel good factor the fact remains that according to the statistics largest number of poor, ultra poor are in India, the land of extremes. Over 200 million women, men and children will partially go to bed hungry to night. There is no famine, but endemic hunger and chronic hunger caused by poverty, inability to buy, inadequate purchasing power. Therefore, I think, when we celebrate 100th year we must look to the next 10 -15 - 20 years; because today the progress is enormous; our whole life is going to change in the next 2 years. Already the information technology has changed the way of life.

We saw in all the banks how many computers under the collaboration of Tata Consultancy Services. Enormous progress has been made more than what we realised. I think still this is just tip of an iceberg. We are in an age of technological revolution. We are in an age of innovations and we are in an age of explosion of brain power. We are very strong in brain power in this country, particularly those who are in this part of the world, I think we should use this power not only for the benefit of ours, but as rightly said by Dr. Raja Chellaiah, to every one. So let the feel good factor for all to be the motto in the next 10 years for City Union Bank. Let us all feel good and in that process also we may absorb many others and I wish City Union Bank and its employees a great success and continued success.



# CENTENARY CELEBRATIONS

## AT TIRUPUR - 21.02.2004
















# CENTENARY CELEBRATIONS

## AT COIMBATORE - 22.02.2004




















# CENTENARY CELEBRATIONS

## AT HYDERABAD- 21.03.2004

















# TECHNOLOGY DRIVEN INDIAN BANKING

## Speech Delivered By Sri. Vepa Kamesam At Hyderabad Centenary Celebrations



1. It is indeed a happy occasion to be present at an august occasion such as the Centenary Celebrations of a successful bank. A hundred years is a path breaking feat and a bank with the credentials of City Union Bank Ltd., has proved that banks could exist across centuries with a shining presence, starting from a temple town like Kumbakonam, if they are able to provide the service expected by customers-by adopting the key word of 'change' and adopting to changing requirements of the customers in particular, the banking industry in general and the economy at large. I consider myself fortunate to be here in your midst as we not only evaluate our laurels but become prepared to meet the challenges of the future 100 years as well.

2. The two letters which have changed the way businesses operate has been an acronym for Information Technology. No other facilitating service has resulted in such large scale benefits as Information Technology. IT has become such an essential ingredient of one's way of life in today's world that it is difficult to imagine a world without IT.

3. Traditionally, business strategies have all focused on meeting the objectives of the business with greater impetus being laid on the channels involved to achieve the broad goals. While different types of organizations such as production companies and service organizations might have differing channels in the conduct of their business, the ultimate objective of any business strategy would be to maximize the returns relating to the very purpose of existence of the business. Today, however, the winds of change wrought by IT have necessitated a paradigm shift where IT does not merely provide value added support to services. It, however, has re-positioned itself as the basic backbone for most business. In fact, we have now reached a stage where it may be difficult to even imagine how a business or an industry would even survive without IT. The Fourth Wave, as Alvin Toffler had predicted years ago, has, if I may add, submerged theories relating to maximizing output using IT, instead IT is the way of business. And those business which have not joined the bandwagon of exploiting the benefits ushered in by IT may have to face a rough ride if not stare at the prospects of possible extinction.

4. The Banking sector is not exception to this changing scenario which is sweeping across the world. Most of the banks have already started to feel the impact of the operations of the new banks in the country. The single biggest advantage of these banks is the large scale deployment of IT in their business endeavours. Their business processes have necessitated that IT should provide solutions to various bottlenecks and problems and the result has been that IT has transcended well as an integral part of their regular operations. In the case of the older banks, however, it is paradoxical to note that even now IT drives the way the organisation function and not vice versa.

5. The changes staring at the face of bankers all relate to the fundamental way of banking which is undergoing a rapid transformation in the world of today. It is widely recognized that the core banking functions alone do not add to the bottom line of banks value added services are slowly but steadily emerging as a substantial opportunity for banks to exploit and customers would not hesitate to use such services in view of the convenience they offer. Prime factors necessitating these changes relate to the forces of competition, productivity and efficiency of operations, reduced operating margins and the need for better asset liability management. One of the major challenges faced by banks is the impact of competition and the falling margins in the the transactions undertaken by them. With wafer thin profit margins being the order of the day the solution to this would lie in increasing volumes well beyond a critical mass so as to result in better operating results for banks. This is best achieved by exploiting the benefits of technology which facilitates handling increased volumes at higher levels of efficiency. It is in this context that there is an imperative need for not mere technology upgradation but also integration of technology with the general way of functioning of banks.

6. It is well recognized that technology holds the key to the future success of Indian Banks, since it is Information Technology which has brought in a sea change in the way banking is being conducted today which is but an indication of the morrow. It would be beyond anybody's imagination to even think about conducting banking business anywhere in the country or using a powerful yet simple medium such as the Internet even from roadside Kiosks. But today this is the reality which owes its credit to the rampant exploit of IT by banks. And concepts such as 'Anywhere Banking' or 'Automated Teller Machines' are but offshoots of technology implementation by banks, as also Internet Banking and Mobile Banking. Such innovations have had a positive impact on customer service but the fundamental benefit that is derived by banks relates to reduced costs of operation such as in handling cash and in servicing customers efficiently and accurately over the counters of branches.

7. The large scale proliferation of IT in the Banking sector has also brought into focus many challenges which have to be overcome by us.

8. A major attitudinal change which is required is the need for a change in the concept relating to treatment of customers of banks with the collapse of geographical distances, banks need to treat the customer as a customer of the whole bank and not as a customer of any particular branch. This is now possible thanks to the use of IT in a large scale whereby centralized data bases are possible in a bank with decentralized access. Another option to achieve this is objective is to have clustered solutions in a bank with data of customers residing in these systems. Banks need to constantly look for innovative services which offer customers the convenience of transacting from anywhere, at any time and using delivery channels more suitable for them. These are frontiers which would add value to the services offered to customers and at the same time act as a means for increasing the profits for banks too.

9. One of the most significant areas where IT has had a positive impact is on substitutes for traditional funds movement services. With the advent of electronic banking, electronic funds transfer and other similar products, funds transfers across different constituents is now easily possible within time frames which would have appeared impossible a few years ago. It is this area which is a big challenge to banks. Many new players are entering into the arena of funds transfer services and the pride of place enjoyed by bankers is under severe threat. The competition is not just from organizations performing funds transfer services but from other seemingly unrelated channels such as service providers for message transfer, quick delivery of instruments and the like who all facilitate the movement of funds based messages at speeds faster than before. The lines between corporate communication carriers and banks are now blurred so that doubts arise where one ends and another begins.

10. The most prominent challenge among the above relates to the concept of security. With the delivery channels relating to funds based services such as movement of funds electronically between different accounts of customers taking place with the use of technology, the requirements relating to security also need to undergo metamorphosis at a rapid pace. Various concepts such as digital signatures, certification, storage of information in a secure and tamper-proof manner like smart cards all assume significance and have to be part of the practices and procedures in the day-to-day functioning of banks of tomorrow. I must hasten to add at this stage that all these would be added requirements and the well established practices of today may also have to not only continue but also co-exist along with the new requirements. Customers of rural India must get the benefit through tailor-made technology solutions with different level of sophistication. They need a human face to interact with banks and back office processing done elsewhere. The Reserve Bank of India has taken upon itself the setting up of a safe, secure and efficient communications network for the exclusive use of the banking sector. Named the INFINET (for the Indian Financial Network), this network is already being used by a large number of banks for funds and non-funds based message transfers, and is made available by the IDRBT here in Hyderabad. I may even add that the INFINET is perhaps one of the very few networks in the world which uses the latest in technology and security called public key Infrastructure PKI, which is not only robust but also well within the legal requirements of the Information Technology Act, 2000. The INFINET provides for inter-bank communication - which implies that banks have to now function as a group and at the same time competing with one another too.

11.An effective security policy which would offer a shared vision of how the controls in the workplace should be implemented with the objective of protecting data, information and eventually, the economic value of the organization. This has to be supplemented by education and training in these areas and reinforced by the actions and concerns of the top management so that a culture of security can be created. These controls have to be supplemented by surveillance, monitoring and auditing to detect unusual usage patterns and deficiencies.

12. Inculcating greater levels of computer awareness among the operative staff at branches of banks by means of training and other means of exposure is a vital requirement. While this is being achieved by means of programmes conducted at the various training establishments of banks, additional inputs from professional technical organizations would bridge the gap which may arise between the levels of technology inputs offered by banks' own training institutions and the developments the world over.

13. Yet another factor which is the driving force behind the use of technology in Banking relates to the benefits that technology offers not only for the banks but for the customers as well. If technology has to be harnessed by banks to reap the benefits it offers, it is essential that the people who use technology are also adept in handling business using technology. It is in this context that training assumes significance. I am glad to witness the initiatives taken by the Banking sector and it is particularly heartening to note that City Union Bank is leaving no stone unturned in this direction through its network of over 125 fully computerized banks.

14. I wish that in their search for excellence, City Union Bank will be a path breaker for others to emulate and follow. I congratulate the Chairman, Board of Directors and dedicated employees of their being a part of this history in its centenary year of its existence. It is both a matter of pride and satisfaction to them and I wish all of them and their families the best in years to come. I am also grateful to the Chairman for having invited me to deliver this key note address and participate in this important function.



# CENTENARY CELEBRATIONS

## AT BANGALORE - 06.04.2004




















# CENTENARY CELEBRATIONS

## AT ERODE - 30.10.2004



















## ஈரோடு நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் Dr. P. இளங்கோ அவர்கள் ஆற்றிய உரை



சிட்டி யூனியன் வங்கியின் இனிய நூற்றாண்டு விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும் மதிப்பிற்குரிய இந்த வங்கியின் தலைவர் திரு. நாராயணன் அவர்களே, இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் எனது இனிய நண்பர் திரு. S.K.M. மயிலானந்தன் அவர்களே, கல்வித்துறையில் பல பணிகளை ஆற்றிவரும் திரு. J. சுத்தானந்தன் அவர்களே, திரு. மகாலிங்கம் அவர்களே, திரு. பாலசுப்ரமணியன் அவர்களே, இங்கே வருகை தந்திருக்கும் பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரியின் தலைவர் திரு. நடராஜன் அவர்களே, தாளாளர் திரு. கிருஷ்ணன் அவர்களே மற்றுமுள்ள வங்கியின் அலுவலர்களே, பொது மக்களே.

இன்றைய தினம் இந்த விழாவிலே கலந்து கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். நான் முதலில் இந்த வங்கியின் விழாவிற்கு ஏன் துணை வேந்தராக இருந்தவனை அழைக்கிறீர்கள் என்று கேட்டேன். உங்களுடைய பேச்சைகேட்டிருக்கிறோம். ஆகையால் நீங்கள் வந்து பேசவேண்டும் என்றார்கள். இருந்தாலும் இன்னொரு காரணமும் உண்டு. அதனை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் திருச்சி மண்டல பொறியியல் கல்லூரியிலே 1990 முதல் 1995 வரை ஐந்து ஆண்டுகள் முதல்வராக பணியாற்றினேன். தலைவர் திரு. நாராயணன் அவர்களுடைய மகனார் திரு. காமகோடி அவர்கள் எனது மாணவனாக அங்கே நான்கு ஆண்டுகள் கெமிகல் எஞ்ஜினியரிங் படித்தார். அப்போது நான் அவரை சிறந்த மாணவர்களில் ஒருவராக அறிவேன். இவ்விழாத் தலைவர் திரு. நாராயணன் அவர்கள் ''விழா தலைவர்'' 22 ஆண்டுகளாக ''விழாத தலைவர்''. சிட்டி யூனியன் வங்கியின் தலைவராக 22 ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வருகிறார். வேறு எந்த வங்கியிலும் யாரும் இது போன்று தொடர்ந்து தலைவராக இருந்ததாக சரித்திரம் கிடையாது. ஆகவே அது அவரது பணியின் சிறப்பினை காண்பிக்கிறது.

''தன் பணியில் சிறந்தார் முன் தலை பணிந்தோம்

தரமுடையோர் தாழ்வதில்லை''

அவ்வாறு இருப்பவர்கள் மானிடத்தின் ஏணி. ஆகவே, அவர்தம் பணியில் சிறந்து விளங்குவதால் அவர்கள் ''விழாத தலைவராக'' இன்றும் காட்சி தருகின்றார். அவர் தலைமையிலே பேசுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். திரு. மயிலானந்தன் அவர்களை நான் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக அறிவேன். அவரை அடிக்கடி சந்தித்து பேசுவதுண்டு, அவர் மிகவும் அமைதியானவர், பல பணிகளை செய்து வருகின்றார். அவர் இந்த விழாவிலே சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதில் மிகவும் சால பொருத்தமானவர். ஈரோட்டிலே திரு. J. சுத்தானந்தன் அவர்கள் இல்லாத விழாவே கிடையாது. அவர் எப்போதும் அமைதியான புன்னகையோடு காணப்படுவார். அவர் கல்விக்கு சிறந்த பணி ஆற்றி வருகிறார். திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் வங்கியிலிருந்து வந்துள்ளார்கள். அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அத்துடன் வங்கியின் ஆண்டு அறிக்கை ஒன்றினையும் அனுப்பி இருந்தார்கள். ஆண்டு அறிக்கையை நான் பார்த்து மிகவும் வியந்து போனேன். அதில் 10 ஆண்டுகளுக்கான வளர்ச்சியை கடைசியில் குறிப்பிட்டிருந்தார்கள். அதை பார்க்கும் பொழுது இந்த வங்கி ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது.

அதில் முக்கியமாக NPA 6.5 விழுக்காட்டுக்கு குறைந்து வந்திருக்கிறது என்றால் அது வங்கியின் பணியின் சிறப்பினை காட்டுக்கிறது. மற்ற வங்கிகளுடன் பார்க்கும் போது, 25, 20, 15 விழுக்காடுகளுக்கு குறையாமல் இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு வங்கிகளுக்கு NPA 8 விழுக்காட்டுக்கு குறைவாக இருந்தாதல் அந்த வங்கிகளுக்கு தன்னாட்சி வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அந்த வகையிலே இந்த சிட்டி யூனியன் வங்கியின் NPA அளவு 8 விழுக்காட்டுக்கு குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. திரு. நாராயணன் அவர்கள், தமது அலுவலர்களுடன் சேர்ந்து நன்முயற்சியோடு அதை சாதித்து இருக்கிறார்கள் என்றால் அது மிகவும் சிறப்பானது. அது மட்டுமல்லாது இந்த வங்கியின் வைப்பு நிதி அதாவது டெபாசிட்டுகள் 10 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1994 ல் ரூ.457 கோடியாக இருந்தது. அது இப்போது 2004 ல் ஐந்து மடங்காக உயர்ந்து ரூ.2347 கோடியாக உள்ளது. நிகரலாபம் 5.8 விழுக்காட்டில் இருந்து இப்போது 33 விழுக்காட்டுக்கு வந்திருக்கிறது, என்றால் அது அந்த வங்கியின் வளர்ச்சி மிகவும் சிறப்பானது என்பதை காட்டுகிறது.

அந்த சிறப்புக்கு காரணமான சிட்டி யூனியன் வங்கியின் தலைவர் திரு. நாராயணன் அவர்களுக்கும் மற்றுமுள்ள அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதலையும் மதிப்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் சாதித்ததற்கு ஒரு காரணம் அதிக அலுவலர்களை சேதர்த்துக் கொண்டதாக இருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்ய வில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு 1171 பணியாளர்களைக் கொண்டு இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு பிறகு 1400 பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. அதிகமாக பணியாளர்களை சேர்த்துக் கொள்ளவில்லை. Automation அதாவது தானியங்கி கணிப்பிகளை முழுமையாக பயன்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு திரு. நாராயணன் அவர்களுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒரு சில பொதுவான கருத்துகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். அதனை ஆங்கிலத்தில் பேசினால் எளிமையாக இருக்குமென நினைக்கிறேன்.

What is the level of the use of technology in banking? What are the applications of modern technology in the banking era and how effectively we have applied so far and how more effectively we have to apply it in future. These are some of the points which I would like to see. The use of technology in the banking is on the increase as every one knows. But the present core banking solutions are still a long way to go. They started computerization of banks a decade ago. But then it was essentially a back office computerizations. It is not visible to the users. But today we have more products and services that were being introduced. Gone are the days we have to go and stand in queues in the banks and got things done. But now the banking people have come out; they have to do marketing; then only they can survive. Anything now is consumer market. So the banking must reach the people. You have to advertise, you have to give all datas such as rate of interest, types of loans, products, services and so many things, So today it has come to on-line centralized and integrated solutions. You have to integrate various activities so that we get end to end solutions in a banking solution whether it is retail or corporate. We would like to give them end to end solutions. This is the concept presently. Ten years ago advanced banks did branch automation. Everybody was

happy saying that the branch is computerised. But that computerization was only a back office automation. But now the scenario is different. With online passbook entry there came the era of computerised printing of passbook. You can go to the bank with computerised passbook and get the entries are printed neatly. This is the first improvement in the service of the customers. Then at the branch level they are moving away from product specific counters. Many banks are having single counters without product specific counters. We go to any counter for all products and services. This is the second improvement. The technology of computerization is used to improve the internal house keeping. That is previously essentially computerizations technology was used for calculating interest, giving interest notices, accruals, standing orders and processes. Now the branch automation of banks did not bring significant competitive advantage for the users and no much impact on customer service. No new products and services were introduced in the several areas. In fact, I used to wonder about a thing. In 1981, I was using (about 23 years earlier) Bank of America card. I was in USA as visiting Professor to California University. I was having Versatile care. I can go any time to the bank there will be a Teller counter - 24 hours opened unmanned. Most of the operations in such counters in USA are unmanned. We have to put the card, punch the ID number and punch the amount we want and we will get the US Dollars in 20 denomination bills. What I am to say that sort of automation was implemented in 1981 or I do not know it might be even earlier. I have fully utilized that Versatile card. But you see it has taken such a lot of time for us to implement such customer friendly applications. When you computerise we need some culture to utilize them. We are talking about ATMs and several banks are having ATMs. When we are using the ATM card, there will be a number which you have to punch after putting the card in the machine. When you are punching the number how many people are looking over your shoulders at what your number is. There is no ethics, no culture. For using automation you require a culture. Even today Railway booking has been so much improved, no counter, no ticket, no class, no date counters; with all that you will see 2 or 3 hands are going into the small counter hole at a time. Why? It is necessary also not only to automate but also to educate people how to use them. When I am punching my number while operating ATM, the number is supposed to be a secret code, people without any shame, look at what you are writing. Previously there were ledgers in banks with leather bound. When you go and withdraw money, people will be peeping through the counters at what the balance in the ledger. Technology can not taken us far. We are always lagging behind in so many activities. For example, we see internet banking. Internet banking is very fast. When you have home computer, you see how many times you operate it.

First electric supply must be there. If it rains the electric supply is gone. If you have electric supply your ISP man must provide connectivity to all the people, all the time - as promised by him when he collect money for this. These ISP men are the intermediaries between the user and the internet and he must be the good man. Then only you will be going to the internet. These are the bottlenecks. We can talk tall online transactions but we have to take other side of the things. First the reliability and security. Now end to end solutions are important for retail, corporate, treasury and products - products like mutual funds, insurance and there are many other services that can be offered by several banks. We need an integrated approach, which is important. Whenever the bank is introducing new services to the customers it should be compatible with the services existing for the customers so that there is continuity. A particular bank goes for different software for different products and services. Finally when you put them in your database they become incompatible. There is no end to end compatibility for a particular user and this aspect is an important aspect in order not to frustrate the customers and this is an important thing. I wish Mr. Narayanan to continue to head the City Union Bank and bring it to more glorious position in the years to come.



## ஈரோடு நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில்
## திரு. J. சுத்தானந்தன் அவர்கள் ஆற்றிய உரை



சிட்டி யூனியன் வங்கியினுடைய நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளுடைய தலைவரும், சிட்டி யூனியன் வங்கியின் தலைவருமான பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. நாராயணன் அவர்களே, இந்த விழாவிலே கலந்து கொண்டு அடுத்து சிறப்புரை ஆற்ற இருக்கக் கூடிய SKM நிறுவனங்களுடைய தலைவரும் மேலாண்மை இயக்குநரும், ஈரோடு மாவட்டத்துக்கு மட்டும் அல்லாது தமிழகம் முழுவதுக்கும் பெருமை சேர்த்துக் கொண்டு இருக்கக் கூடிய தொழிலதிபரும், சமுதாய சிந்தனையாளருமான பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு SKM மயிலானந்தன் அவர்களே, இங்கு சிறப்புரை ஆற்றிவிட்டு அமர்ந்திருக்கக் கூடிய பாரதிதாசன் பல்கலைக் கழக துணை வேந்தரும், தனக்கென தனிமுத்திரை பதித்த, பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய திரு. P. இளங்கோ அவர்களே, மரியாதைக்குரிய இயக்குநர் திரு. மகாலிங்கம் அவர்களே, வங்கியின் செயல் இயக்குநர் திரு. பாலசுப்ரமணியன் அவர்களே, பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி தலைவர் மரியாதைக்குரிய திரு. P.S. நடராசன் அவர்களே, செயலர் பெரு மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணன் அவர்களே, மற்றும் மதிப்பு மிக்க வாடிக்கையாளர்களே, வங்கியினுடைய அலுவலர்களே, பெரியோர்களே, நண்பர்களே, பத்திரிக்கை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு வங்கியானது நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பெற்று நூறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஒரு வளர்ச்சியைப் பெற்று இன்று தமது நூற்றாண்டு விழாவைக் காண்பது என்பது மிக அரிய செயல் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நமது அனுபவத்திலே பல்வேறு வங்கிகளுடைய செயல்பாடுகளை எல்லாம் நாம் பார்த்து கொண்டு இருக்கிறோம். பொதுவாக, உயிர் வாழும் இனங்களுக்கெல்லாம் ஒரு ஆயுள் என்பது நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் நிறுவனங்களுக்கு அவ்வாறு கிடையாது. நிறுவனங்கள் நூறு ஆண்டுகள் அல்ல, இன்னும் பல நூறு ஆண்டுகள் நிலைத்து நிற்க முடியும், அந்த நிறுவனங்கள் செம்மையாக செயல்பட்டால். அந்த வகையிலே சிட்டி யூனியன் வங்கியானது, கோயில் நகரமாம் கும்பகோணத்திலே, தஞ்சைமாவட்டத்து மக்களுக்கு மட்டும் வங்கி பணிகளை செய்வதற்கு 1904 - ஆம் ஆண்டிலே Power Point Presentation ல் பார்தோம், 1904 ல் இந்த வங்கியின் மூலதனம், டெபாசிட் தொகைகள், கடன் கொடுத்த புள்ளி விவரங்களும் 2004 ல் எந்த அளவிலே அவர்களுடைய வளர்ச்சி இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்தோம் - மிகச் சிறிய அளவிலே ஆரம்பிக்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு அதனுடைய வளர்ச்சி என்பது மிகப் பெரிய அளவிலே இல்லை, ஆனால் அதற்கு பிறகு நூறு ஆண்டுகளின் பிற்பகுதியில், குறிப்பாக கடந்த 25 ஆண்டுகளில், வங்கியினுடைய வளர்ச்சியானது படிப்படியாக அது மேல் நோக்கியே வந்து கொண்டிருக்கிறது எல்லா நிலைகளிலும். அதிலும் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை கண்டிருக்கிறது. நமது மரியாதைக்குரிய திரு இளங்கோ அவர்கள் புள்ளி விவரங்களோடு

எல்லாவற்றையும், அதிலும் NPA ஐ பற்றியும் விளக்கமாக கூறினார்கள். ஒரு வங்கியினுடைய வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது இது போன்ற காரணிகள் தான். இந்த நூற்றாண்டு காலத்தில் கால் நூற்றாண்டு காலம் ஒருவர் தலைவராக இருந்த காரணத்தினால் தான் இந்த வங்கியானது இந்த வளர்ச்சியை பெற்றுள்ளது என்பதிலே யாருக்கும் எந்த விதமான ஐயப்பாடும் இருக்க முடியாது. இதற்கு முன்பு இருந்தவர்கள் எல்லாம் நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்திருந்தாலும் கூட இன்று அதனுடைய தலைவர் மரியாதைக்குரிய திரு. நாராயணன் அவர்கள் தன்னுடைய பரந்துபட்ட அனுபவத்தைக் கொண்டு காலத்திற்கேற்ப, அதிலும் வங்கியினுடைய வளர்ச்சிக்கு மட்டும் அல்ல, வாடிக்கையாளர்கள் வளர்ச்சிக்கும் என்னென்ன தேவையோ அவற்றை எல்லாம் திட்டமிட்டு செயல் படுத்தியதின் காரணத்தினால் தான் இந்த வங்கி வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. Power Point Presentation ல் இந்த வங்கியிலே கடனுதவி பெற்றவர்கள் எல்லாம் ''ஒரு குடும்பம்'' என கூறினார்கள். இன்று எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் சரி, வங்கியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தவொரு தொழிலாக இருந்தாலும் சரி அல்லது எங்களை போன்று கல்வி நிறுவனங்களை நடத்துபவர்களானாலும் சரி மக்கள் எதிர் பார்ப்பது என்ன சேவை கிடைக்கும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள். வங்கிகளை பொருத்த வகையில் மிக மிக தேவையான ஒன்றாகும். அந்த வகையில் சிட்டி யூனியன் வங்கியானது வாடிக்கையாளர்களுடைய தனிப்பட்ட தேவைகளை உணர்ந்து அவர்களுடைய வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை செய்தது தான் இந்த வங்கியின் வளர்ச்சிக்கு காரணம் என நான் நம்புகிறேன். எந்த தொழில் செய்தாலும் நாம் முதலீடு செய்ய வேண்டும். உழைக்க வேண்டும். ஆனால் முதலீடு மட்டும் செய்து விட்டு வேறு எந்தவிதமான உழைப்பும் இல்லாமல் செய்யக் கூடிய தொழில் வட்டி தொழில் ஆகும். ஆனால் வங்கித் தொழில் என்பது அப்படி அல்ல. அத்துடன் கூட பல பணிகளையும் செய்ய வேண்டும். சிட்டி யூனியன் வங்கி அப்படித் தான் தொழில் செய்துள்ளார்கள். அதாவது வாடிக்கையாளர்களும் வளர்ச்சி அடைந்தார்கள். இந்த வங்கியும் வளர்ச்சி அடைந்துள்ளது. சிட்டி யூனியன் வங்கி தமது வாடிக்கையாளர்களிடம் கெடுபிடி செய்திருந்தார்கள் என்றால் வாடிக்கையாளர்களும் வளர்ந்திருக்க முடியாது. இந்த வங்கியும் இந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து இருக்க முடியாது. ஆகையால் தான் அந்த வாடிக்கையாளர்கள் தங்களை ஒரு குடும்பம் என சொன்னார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு சில நேரங்களில் வியாபாரத்தில் ஏற்ற தாழ்வுக்கு ஏற்ப நெருக்கடிகள் ஏற்பட செய்யத்தான் செய்யும். ஆனால் அந்த வாடிக்கையாளர்களுடன் ஒன்றிப் போய் அவர்களுடைய சிரமங்களை உணர்ந்து அந்த கஷ்ட நேரத்திலும் அவர்களுக்கு உதவி செய்து அவர்களை வளரச் செய்தும் சம்பாதிக்கச் செய்தும் பிறகு தங்களுடைய கடனையும் திரும்ப பெற்றுக் கொள்ளகூடிய அளவில் சேவை செய்த காரணத்தினால் தான் இந்த வங்கி இந்த அளவில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்த வங்கி NPA எல்லாம் இந்த முறையிலேதான் வசூல் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியின் விதிமுறை உள்ளன. அவைகளுக்கு உட்பட்டுதான் செயல்பட்டாக வேண்டும். அந்த கட்டுபாடுகளுக்கு மீறி அவர்கள் நடக்க முடியாது. ஆனால் வாடிக்கையாளர்களிடம் அக்கறை கொண்டு செயல்படுகின்ற காரணத்தினால் தான் சிட்டி யூனியவன் வங்கி தனியார் வங்கிகளில் தலைசிறந்த வங்கியாகத் திகழ்ந்து வருகிறது. வருகின்ற 2005 - ம் ஆண்டு ஜனவரி 1 ம் தேதி முதல் WTO ன்

உலகமயமாக்கல் காரணத்தினால் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் எல்லா தொழில்களும் இங்கு வந்து செயல்பட உள்ளன. அதற்கு உரிய துறைகளும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு திறந்து விடப்பட உள்ளது. அப்படி வரும்போது வெளிநாட்டு வங்கிகள் இங்குள்ள வங்கிகளுக்குப் போட்டியாக வரப் போகின்றன. ஆனால் நமது மக்களின் மன நிலைகளை அறிந்து, தேவை அறிந்து, அவர்களால் சேவை செய்ய முடியுமா என்பதில் ஓரளவு ஐயப்பாடும் உள்ளது. வெளிநாட்டு வங்கிகள் மிக வளர்ந்த தொழில்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் தான் வங்கிப் பணி செய்ய இயலும் அப்படிப் பட்ட சூழ்நிலை வந்தாலும் கூட சிட்டி யூனியன் வங்கி போன்ற வங்கிகள் மிகச் சிறப்பாக வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் இளங்கோ அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். ‘‘விழாத் தலைவர் விழாத தலைவர்’’ என்று சொன்னார்கள். எனக்கு தெரிந்த அளவில் கால் நூற்றாண்டு காலம் ஒருவர் ஒரு வங்கியின் தலைவராக இருக்கிறார் என்பது வேறு எங்கும் யாரும் இருந்தார்கள் என வரலாறும் கிடையாது சரித்திரமும் கிடையாது. இந்த வங்கியினுடைய வெற்றிக்குக் காரணமே தலைவர் அவர்கள் தான். நீண்ட காலம் ஒருவர் தலைவராக இருந்த காரணத்தினால் மாறி வருகின்ற சூழ்நிலைக்கேற்ப, வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப தமது கொள்கைகளை வகுத்துக் கொண்டு செயல்பட்டதின் காரணத்தினால் தான் இந்த வங்கியானது சிறந்த வளர்ச்சியைப் பெற்று நூற்றாண்டு விழாவினை நடத்திக் கொண்ட இருக்கிறது. நான் முன்னமேயே சொல்லியதைப் போல் நிறுவனங்களுக்கு வயது என்பது இல்லை. இன்னும் எத்தனை பல நூற்றாண்டுகளுக்கு இந்த வங்கி இருந்து செயல்பட போகிறது என்பதை நாம் இருந்து பார்க்கப் போவதில்லை. ஆனால் நிச்சயமாக இதற்கு நல்ல அடித்தளம் இதனை நிறுவியவர்கள் அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு வந்த தலைவர்களும் சரி, இப்போது உள்ள தலைவர் அவர்களும் மிகச்சிறந்த அடித்தளத்தையும் அமைத்து கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக பணியாற்றுகின்ற பணியாளர்களை வைத்து தான் வங்கியினுடைய வளர்ச்சியை காண முடியும். பணியாளர்கள், வாடிக்கையாளர்களிடம் இன்முகத்துடன், தலைவருடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப, பணியாற்றுகின்ற காரணத்தினால் தான் இந்த வங்கியானது தமிழகத்தில் மிகச் சிறந்த வங்கியாக விளங்கி வருகிறது. இது மேன்மேலும் வளர்ச்சி பெற்று இன்னும் ஒரு நூற்றாண்டு அல்ல பல நூற்றாண்டுகள் இந்த வங்கியானது சிறப்பான சேவையை எல்லோருக்கும் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய விருப்பதை தெரிவித்து இந்த வங்கி மேலும் வளர வாழ்த்துக்களை தெரிவித்து நன்றி கூறி விடை பெறுகிறேன்.



# ஈரோடு நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில்
# திரு. SKM. மயிலானந்தன் அவர்கள் ஆற்றிய உரை



சிட்டி யூனியன் வங்கியினுடைய நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, அதனுடைய தலைவர் மற்றும் செயல் இயக்குநர், முக்கிய வங்கி மேலாளர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கின்ற எனது பேரன்பிற்குரிய நண்பர் திரு. சுத்தானந்தன் அவர்களுக்கும், எனது இனிய நண்பர் முன்னாள் துணை வேந்தர் அவர்களுக்கும் மற்றும் இங்குள்ள வங்கியின் வாடிக்கையாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் எனது வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன். சிட்டி யூனியன் வங்கியைப் பற்றி பல விஷயங்களை படித்துக் கொண்டு வந்திருக்கிறேன். அவற்றை பற்றி பேசவிரும்பினேன். ஆனால், முன்னாள் துணை வேந்தர் அவர்கள் சிட்டி யூனியன் வங்கியைப் பற்றி சிறப்பாக Review செய்து விட்டார்கள். திரு. சுத்தானந்தன் அவர்கள் பேசும் போது மிக அற்புதமாக தமது வாழ்த்துக்களை தெரிவித்து விட்டார்கள். ஆயினும் விட்டுப் போன ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் எடுத்துப் பேசவிரும்புகின்றேன். எனக்கு மிகவும் பிடித்த விஷயம் இந்த ஆண்டு 60% மொத்த Dividend கொடுத்து இருக்கிறார்கள். அதில் நூற்றாண்டுக்காக 20% கொடுத்து இருக்கிறார்கள். Commercial கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இது இந்த வங்கியின் சிறந்த வளர்ச்சிக்கு அறிகுறியாகும். முதலீட்டாளர்களுக்கு மிகவும் திருப்தியாக இருக்கும்.

அடுத்தபடியாக எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சியை அளித்தது தொடர்ந்து தலைவராக இருப்பதைப் பற்றி திரு. சுத்தானந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு வளர்ச்சி என்பது ஒரு வங்கியாகட்டும், நிறுவனமாகட்டும், தொழிலாகட்டும் நல்ல நிர்வாகம் மட்டுமே வளர்ச்சியை கொடுக்கும். நல்ல நிர்வாகம் என்றால் அந்த மேலாண்மை சிறப்பாக இருந்தால் மட்டுமே அதில் பணிபுரிகின்ற டைரக்டர்கள் முதல் கொண்டு, Chief Executives முதல் கொண்டு அலுவலர்கள் வரை திறமை மிக்கவர்களாக விசுவாசம் மிக்கவர்களாக Sincere ஆக வேலை செய்பவர்களாக இருந்தால் எந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும் நிச்சயம் வெற்றி பெறும். இது தான் நாமெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை. நம்முடைய தொழில் கூட வெற்றி பெற வேண்டும் என்றால் சின்ன பெட்டி கடையாக இருந்தாலும், பெரிய நிறுவனங்களாக இருந்தாலும் நான் என்னுடைய 40 ஆண்டுகளாக தொழில் அனுபவத்தில் பார்த்து இருக்கின்றேன். என்னுடைய நண்பர்கள் தலைமை தாங்குகின்ற அவர்களுடைய Discipline, Adminstration and Efficiency ஒரு பள்ளி கூடம் ஆகட்டும், ஒரு வங்கி ஆகட்டும், ஒரு கல்லூரி ஆகட்டும், ஒரு மானேஜர் வந்தால் அந்த வங்கி நன்றாக இருக்கும். ஒரு தலைமை ஆசிரியர் வந்தால் அந்த பள்ளி நல்ல ரிசல்ட் கொடுக்கும். ஒரு பிரின்சிபால் வந்தால் அந்த கல்லூரி நன்றாக இருக்கும். இதற்கு எல்லாம் என்ன காரணம் என்றால் தனி நபருடைய அந்த மேலாண்மைத் திறன். அந்த அடிப்படையில் தான் தொடர்ந்து பல ஆண்டுகளாக அவர் சேர்மன் ஆக இருக்கிறார் என்றால் அந்த வங்கியின் வளர்ச்சி Curve வை பார்க்கிறபோது தொடர்ந்து மேல் நோக்கி போவதில் இருந்து அந்த வளர்ச்சிக்கு அவர்கள் நிர்வாகம் தான் காரணம் என்பதை நாம் உணர வேண்டும். இதையெல்லாம் நமது தொழிலில்

follow செய்ய வேண்டும். அதோடு அவர்கள் ஆரம்பித்த அந்நியச் செலாவணி சுமார் 1000 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் நம்முடைய நாட்டுக்கு இப்போது தேவை அந்நியச் செலாவணி இருப்பாகும். ஏனென்றால் நாம் நிறைய oil இறக்குமதி செய்து கொண்டு இருக்கிறோம் நமக்கு அந்நியச் செலாவணி இருப்பு நிறைய தேவைப்படுகிறது. அதற்காக அரசாங்கம் ஏற்றுமதிக்கு நிறைய சலுகைகள் கொடுத்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற வாடிக்கையாளர்களை அழைத்து தனியார் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தான் பேசுவார்கள். அனுபவ ரீதியாக நான் சொல்லுகிறேன். எப்பொழுது என்னுடைய வெற்றி தொடர்ந்து நன்றாக இருந்தது என்றால் எப்பொழுது - கடந்த 20 ஆண்டுகளாக - நான் முன்னால் எந்த தனியாரிடமும் கடன் வாங்குவதில்லை என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டேன். இருக்கின்ற கடனை இன்னும் 3 - 5 ஆண்டுகளில் திருப்பிக் கொடுத்து விட்டு எந்தவொரு தனியாரிடமும் கடன் வாங்குவதில்லை. அந்த ஒரே காரணத்தினால் தான் நான் வெற்றிபெற்ற மனிதனாக இருக்கின்றேன்.

ஒரு Business ல் Crisis வந்தால் நமது வங்கியுடன் merge ஆகி விட்டால் அந்த வங்கி நம்மை காப்பாற்றி விடுவார்கள். எல்லோரும் இதை கடைபிடிக்க வேண்டும். இன்று வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு - வெளிநாடுகளில் 4% க்கு கிடைக்கிறது - 10%, 9% அல்லது 8% வட்டிக்கு கடன் கிடைக்கிறது மற்றும் நமது தொழிலில் வட்டி செலவு தான் அதிகமாக இருக்கிறது. நாம் 10% க்கு வாங்குவதை விட்டுவிட்டு 24 - 25% க்கு தனியாரிடம் வாங்கி அவர்கள் கொடுத்த செக்குகளை ஹானர் பண்ணுவதற்கு தமது தொழிலை விட்டு எங்கும் கடன் வாங்கிக் கொண்டு அலைந்து கொண்டிருப்பதால் தொழில் தோல்வி அடைந்து விடுகிறது. அதற்கு காரணம் Finance discipline இல்லாதது தான். இது போன்ற வங்கிகளை கலந்து கொள்ளும் போது அவர்களுடைய வளர்ச்சி எப்படி இருக்கிறது என்றால் discipline மற்றும் நல்ல நிர்வாகம் இவை தான் காரணம். எப்படி நமது உடல் ஆரோக்கியத்துக்கு Character க்கு discipline முக்கியமோ, அது போல் நமது தொழில் வளர்ச்சிக்கு, நாட்டு வளர்ச்சிக்கு Finance discipline ரொம்ப முக்கியம். இப்போது நான் ஒரு வியாபாரியாக, தொழில் அதிபராக இருப்பதால் நான் பல்வேறு வெற்றிகளையும், தோல்விகளையும் பார்த்து overcome பண்ணி வந்துள்ளோம். எந்தவொரு product ம் எந்தவொரு நாட்டுக்கும் விற்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாம் தயாரிக்கும் பொருள்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்படுவதைக் காட்டிலும், சைனாவில் தயாரிக்கப்படுவதைக் காட்டிலும் சிறந்ததாக தயாரித்து விற்க முடியும் என்ற நம்பிக்கை வந்து இருக்கிறது. நாம் இந்தியர்கள் முட்டாள்கள் இல்லை. இதற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது நிதி தான். இப்போது தனியாரிடம் டெபாசிட் செய்வதும் ஆபத்து தனியாரிடம் கடன் வாங்குவதும் ஆபத்து ஏனென்றால், தொழிலில் சிக்கல் வந்தால் தனியாரிடம் கடன் வாங்கினால் அவன் தான் நம்மை மூழ்க அடிப்பான். அதே மாதிரி அதிக வட்டி கிடைக்கிறது என்று போட்டவர்களுக்கும் நஷ்டம் தான். இங்கு நிறைய வாடிக்கையாளர்கள் வந்திருக்கிறீர்கள். சிட்டி யூனியன் வங்கி போன்ற வங்கியில் கடன் வாங்குவது மிகவும் சுலபம். ஏனெனில், இந்த வங்கியில் நேரடியாக சேர்மன் அல்லது செயல் இயக்குநரைப் பார்த்து பேசி கடன் வாங்குவது எளிது.

ஆக, இப்படிப்பட்ட நல்ல சிந்தனைகளைத் தாங்கி நம்முடைய தொழிலை விருத்தி செய்ய வேண்டியது நமது குடும்பத்திற்கும், நாட்டிற்கும் நல்லது. எவ்வளவு தான் சலுகை கொடுத்தாலும் கணக்கே வைக்க வில்லை என்றால் வங்கிகளில் கூட கடன் வாங்க முடியாது. ஆக,

பல கோடிக்கணக்கான பணம், முட்டை பாக்டரி ஆரம்பித்தபோது நஷ்டம் ஏற்பட்டது. அதை முழுவதும் ஈடு செய்து இந்த ஆண்டு டிவிடண்ட் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்து எக்கச்சக்கமாக வெற்றி அடைந்துள்ளது. அதற்கு ஒரே காரணம் நான் தனியாரிடம் கடன் வாங்கவில்லை. என்னுடைய பிரச்சினையை வங்கி மேலாளரிடம் விளக்கினேன். வங்கி என்னுடைய discipline, character களை பல ஆண்டுகளாக பார்த்துள்ளார்கள். கணக்கு வழக்குகளை பார்க்க வில்லை. Face to Face எனக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தார்கள். நாணயம், நேர்மை, முறையான கணக்கு வழக்கு, நல்ல நிர்வாகம், Finance discipline ஆகியவையே தான் காரணம். இவையெல்லாம் இல்லாமல் overtrade பண்ணக்கூடாது. Funds divert பண்ணக்கூடாது. Business ethics ல் term loan ஐ working capital ஆக பயன் படுத்தக்கூடாது. Working capital என்று கூறி வீடு கட்டக்கூடாது. இதை யெல்லாம் நாம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். சிட்டி யூனியன் வங்கியின் நூறு ஆண்டுகால வளர்ச்சியிலே ஆயிரக் கணக்கான குடும்பங்கள், தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான லேபர்கள் எல்லாம் அவர்களுடைய வாடிக்கையை மேம்பாடு செய்து இருப்பார்கள். இப்போது இது போன்ற வங்கிகள் எல்லாம் இறங்கி வந்து சிறந்த சேவை செய்து வருகிறார்கள். இதையெல்லாம் நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். இத்தகைய வளர்ச்சிக்கு தலைவர் அவர்கள் தொடர்ந்து 25 ஆண்டுகள் தலைவராக இருந்து வருகிறார்கள் என்று எல்லோரும் பாராட்டினார்கள். அவர் நிர்வாக திறமை இருந்ததால் தான் தொடர்ந்து தலைவராக இருந்து வருகிறார். இல்லையென்றால் இருக்க முடியாது. உலகளாவிய modern technology மற்றும் marketing technology யை உபயோகப்படுத்த வேண்டும். அந்த வகையிலே 90% கணினி மயமாக்கி இருக்கிறார்கள். இதையெல்லாம் தான் யூகமாக செய்ய வேண்டும். அது போல் நாமும் சின்ன தொழிலோ, பெரிய தொழிலோ அந்த மாதிரி செய்து படிப்படியாக வளரவேண்டும். நமது வளர்ச்சிக்கு இந்த வங்கி மிகவும் உதவி செய்து இருக்கிறார்கள். இந்த நூறு ஆண்டு கால அவர்களுடைய சாதனைக்கும் நாம் நன்றி சொல்ல வேண்டும். இந்த நல்ல நேரத்தில் நினைவு கூர்ந்து இந்த வங்கி மேலும் மேலும் வளர்ந்து பல ஆயிரம் ஆண்டுகள் இருந்து இந்த மக்களுக்கும் நாட்டுக்கும் சேவை புரிய வேண்டுமென வாழ்த்தி எல்லாம் வல்ல இறையருள் அவர்களுக்கு உறு துணையாகவும், பாதுகாப்பாகவும், வழி நடத்தியாகவும் அமைய வேண்டுமென வேண்டி விரும்பி வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

# Centenary Celebrations
# Valedictory

